செய்யப்பட்டிருக்கிறது. பல மாணவர்கள் விடுதிகளில் முட்டை, பால் கொடுப்பதில்லை. ஆகவே, இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் எந்தப் புகாரை வைத்து முட்டை, பால் வழங்கப்படவில்லையென்று சொன்னுர்களோ அதே போல எங்கும் நிலைமை இருந்த காரணத்தினுல் இதைப் பற்றி ஆலோசிப்பதற்கு முன்னுல் வறட்சி நிலை ஏற்பட்டு அதன் காரணமாக அரிசி விலை ஏறிவிட்டதாலும், மற்ற பண்டங்களின் விலை அதிகரித்து விட்டபடியாலும் 5 ரூபாய் அதிகப்படியாக முட்டை, பாலுக்காக கொடுக்கப்பட்டதையும் சேர்த்து ஏற்கெனவே மாணவர்களுக்குக் கொடுத்து வந்த உணவின் அளவுகள் குறையக்கூடாது என்று சரி செய்து வைத்திருக்கிறேம், இது தற்காலிகமானதுதான். இதை பின்னுல் ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் தலைவரவர்களே, இப்போது நகரத்தில் வழங்குகிற உணவு மிகவும் புழு நிறைந்ததாக. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுரேந்திரன் இந்த பாயிண்ட் ஆஃப் ஆர்டரைப் பற்றி ஏற்கெனவே அனுமதிக்க முடியாது, அப்ரோப்பிரியேஷன் பில்லில் பேசிக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். அப்படியிருந்தும் இப்போது பேசுவது முறையல்ல.

வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) கவன ஈர்ப்பு

கூடலூர் தாலுகா, கொலப்புள்ளி என்ற இடத்தில் புது வாழ்வுத் திட்டத்தில் இலங்கை தமிழருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படாமை குறித்து.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, பேரவை விதி 41-ன் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு அரிசன நல அமைச்சரின் கவனத்திற்குக் கிற்குக் கொண்டு வருகிறேன்.

1975 ஏப்ரல் 7] [திரு. கே. என். குமாரசாமி]

கூடலூர் தாலுக்கா, சேரன்கோடு பகுதி, கொலப்புள்ளி என்ற இடத்தில் புது வாழ்வுத் திட்டத்தின் கீழ் 1,500 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படாமல் இருப்பதால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் பற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, ஸ்ரீலங்காவிலிருந்து வரும் அகதிகளுக்குப் புது வாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக, 1,875 அகதிக் குடும்பங்களிலிருந்து 3,750 அகதிகளை குடியமர்த்துவதற்காக நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் 3,750 ஏக்கர் பரப்பளவில் தேயிலைத் தோட்டங்களை வளர்ப்பதற்கான திட்டம் காடுகள் துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெருந்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குவதை எதிர்நோக்கி, இத்திட்டத்தின் முதல் நிலையை, அதாவது 750 ஏக்கர் பரப்பளவில் தேயிலைத் தோட்டங்களை வளர்ப்பதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதுவரையில், மொத்தம் 1,892 பேர் அடங்கிய 444 குடும்பங்கள் இத்தேயிலைத் தோட்டங்களில் அமர்த்தப் பட்டுள்ளனர். இக்குடும்பங்கள் அனைத்துக்கும் இலவச வீட்டு வசதி கொடுக்கப்பட்டுள்ளது. மேற்சொன்னவர்களில், 858 அகதித் தொழிலாளர்களுக்கு முறையான வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. 91 அகதிகள் அரசுப் பணியில் அமர்த்தப் பட்டுள்ளனர். குடும்பம் ஒன்றுக்கு இரண்டு தொழிலாளர் வீதம் முறையான பணி அளிக்க வகை செய்வதே அரசின் நோக்கமாகும். ஆயினும் வேலை இருக்கும்போது, மற்றவர்களும் தாற்காலிகப் பணியாளர்களாக வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றனர்.

அகதிகளுக்கு புதுவாழ்வு அளிப்பதற்கு எத்தகைய உதவி அளிக்கப்பட வேண்டும் என்பது பற்றி, அவரவர் குடும்ப அட்டைகளில் கண்டியிலுள்ள உதவி ஹை கமிஷனர் அலுவலகத்தில் உள்ள முதல் செயலாளரால் குறிப்பிடப்படுகிறது. வேலை காலியிடம் குறித்து திட்ட அதிகாரிகள் அனுப்பும் அறிக்கையின் அடிப்படையில் அகதிகள் வேலைக்காக மலைத்